ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2022.12.21 |

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் 2022 நவெம்பரில் தொடர்ச்சியாக இரண்டாவது மாதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு, 2013=100)[1] ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 ஒத்தோபரின் 70.6 சதவீதத்திலிருந்து 2022 நவெம்பரில் 65.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று, உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஒத்தோபரின் 80.9 சதவீதத்திலிருந்து 2022 நவெம்பரில் 69.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஒத்தோபரின் 61.3 சதவீதத்திலிருந்து 2022 நவெம்பரில் 60.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

2022 ஒத்தோபரில் அவதானிக்கப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றத்தின் வீழ்ச்சி 2022 நவெம்பரில் தொடர்ந்தும் இடம்பெற்று 0.27 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. 0.49 சதவீதமாகவிருந்த உணவு வகையிலுள்ள பொருட்களின் மாதாந்த விலைகளின் வீழ்ச்சி, இதற்கு பிரதானமாகப் பங்களித்தது. அதற்கமைய, உணவு வகையினுள் உடன் மீன், சீனி, அரிசி, கருவாடு மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் விலைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறிருப்பினும், மாத காலப்பகுதியில் ஆடை மற்றும் காலணி, நலம் (தனியார் வைத்தியசாலைகளுக்கான/ சிகிச்சை நிலையங்களுக்கான கொடுப்பனவுகள்), தளபாடம், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுப் பராமரிப்பு அத்துடன் நானாவிதப் பொருட்கள் மற்றும் சேவைகள் துணை வகைகளில் மாதகாலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்களால் தூண்டப்பட்டு 2022 நவெம்பரில் உணவல்லா வகையிலிருந்தான பங்களிப்பு 0.23 சதவீதமாகவிருந்தது. எனினும், போக்குவரத்து (பெற்றோல்), வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் (பராமரித்தலுக்கான பொருட்கள்) துணை வகைகள் 2022 நவெம்பரில் வீழ்ச்சியடைந்தன.

அதேவேளை, ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2022 ஒத்தோபரின் 42.2 சதவீதத்திலிருந்து 2022 நவெம்பரில் 46.7 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம், (ஆண்டிற்கு ஆண்டு) 2022 ஒத்தோபரின் 62.4 சதவீதத்திலிருந்து 2022 நவெம்பரில் 60.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம், 2022 ஒத்தோபரின் 35.7 சதவீதத்திலிருந்து 2022 நவெம்பரில் 40.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

| பணவீக்கம் | ஒத்தோபர் 2022 | நவெம்பர் 2022 |
|---|---|---|
| **முதன்மை** | | |
| சுட்டெண் பெறுமதி | 256.9 | 256.3 |
| மாதாந்த மாற்றம் (%) | 0.3 | -0.2 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 70.6 | 65.0 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 42.2 | 46.7 |
| **மையம்** | | |
| சுட்டெண் பெறுமதி | 244.6 | 244.9 |
| மாதாந்த மாற்றம் (%) | 1.3 | 0.1 |
| ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%) | 62.4 | 60.1 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (%) | 35.7 | 40.0 |

**தேநுவிசு அடிப்படையிலான பணவீக்கத்தின் அசைவு (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்)**




**தேநுவிசு இல் மாதாந்த சதவீத மாற்றத்திலான பங்களிப்பு**




[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (2013=100) இலங்கையின் அனைத்து மாகாணங்களிலுமுள்ள வீட்டலகுகள் மூலம் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை எடுத்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

## துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு மாற்றம்) அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம்




## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் (2013=100)

| காலம் | | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | மாதம் | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மையம்) |
| 2021 | நவெம்பர் | 155.3 | 153.0 | 3.1 | 1.6 | 11.1 | 8.8 | 6.2 | 5.0 |
| | திசெம்பர் | 161.0 | 155.7 | 3.7 | 1.8 | 14.0 | 10.8 | 7.0 | 5.5 |
| 2022 | சனவரி | 166.0 | 159.2 | 3.1 | 2.2 | 16.8 | 12.9 | 8.1 | 6.2 |
| | பெப்புருவரி | 167.8 | 161.2 | 1.1 | 1.3 | 17.5 | 14.1 | 9.3 | 7.1 |
| | மாச்சு | 172.7 | 166.3 | 2.9 | 3.2 | 21.5 | 17.3 | 10.6 | 8.2 |
| | ஏப்பிறல் | 190.3 | 182.3 | 10.2 | 9.6 | 33.8 | 27.9 | 13.0 | 10.2 |
| | மே | 208.7 | 197.9 | 9.7 | 8.6 | 45.3 | 37.7 | 16.3 | 13.0 |
| | யூன் | 231.5 | 215.9 | 10.9 | 9.1 | 58.9 | 49.3 | 20.8 | 16.8 |
| | யூலை | 244.4 | 229.0 | 5.6 | 6.1 | 66.7 | 57.3 | 25.9 | 21.3 |
| | ஓகத்து | 250.4 | 235.1 | 2.5 | 2.7 | 70.2 | 60.5 | 31.3 | 26.0 |
| | செத்தெம்பர் | 256.2 | 241.5 | 2.3 | 2.7 | 73.7 | 64.1 | 36.9 | 31.0 |
| | ஒத்தோபர் | 256.9 | 244.6 | 0.3 | 1.3 | 70.6 | 62.4 | 42.2 | 35.7 |
| | நவெம்பர் | 256.3 | 244.9 | -0.2 | 0.1 | 65.0 | 60.1 | 46.7 | 40.0 |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்